**தலைப்பு 281 – கமநல அபிவிருத்தி திணைக்களம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 281 – கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 12 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

எனது அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.1 (அ)(i),(ii), (ஆ)(i),(ii),(iii),(iv) ஆகிய பந்திகளில் குறிப்பிட்ட அவதானிப்புக்கள் தொடர்பாக முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் மீளாய்வாண்டின் போதும் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.6. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்க கூற்றுக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிக்கும் தனித்தனி மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் மீதிக்குமிடையே காணப்பட்ட ரூபா 2,301,653 வித்தியாசத்தினை இனங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்டகாலமாக காணப்பட்டு வரும் இனங்காணமுடியாத வரவு மீதிகள் ஆனதுடன் 2022 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்ட சில மீதிகளுக்காக நிறுவனங்களுக்கு கடிதங்கள் அனுப்பி தீர்த்துவைக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இந்த வித்தியாசங்களை இனங்கண்டு தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய பிரிவிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | வித்தியாசங்களை இனங்கண்டு சரிசெய்தல் வேண்டும். |
| (ii) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்திலிருந்து இடம்மாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,991,743 கடன் மீதியானது 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் உருவாகிய கடன் மீதிகளாக இருந்ததுடன் அவை 2022 ஆம் ஆண்டின் போதும் சரியாக கணக்குகளில் செம்மையாக்கப்படவில்லை. | இக்கடன் மீதியானது 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக்கிடையே உள்ளக ரீதியாக இடமாற்றம் பெற்றுச் சென்றவர்களின் கடன் மீதி உரிய ஆண்டுகளிலிருந்து இடமாற்றம் பெற்று வந்தவர்களின் கடன் மீதியுடன் எதிரீடு செய்யப்பட்டு தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் இக்கடன் உரிய ஆண்டின் போதும் சரியான வகையில் கணக்குகளில் செம்மையாக்கப்பட்டிருக்கவில்லை. உள்ளக ரீதியாக இடமாற்றம் பெற்றுச் சென்ற கடன் மீதிகளை | இம்மீதிகள் தாமதமின்றி சரிசெய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்ய வேண்டியுள்ள கடன் மீதி அல்லாததுடன் இது 2008, 2009 ஆம் ஆண்டுகளில் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் பீ கணக்கில் இடம்பெற்றுள்ள உள்ளக தீர்த்துவைத்தல்களின் தவறினால் மிகுதியாகக் காணப்பட்டது. மாவட்ட அலுவலகங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது இக்கடன் தொடர்பாக உறுதியான தகவலைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | |

**(ஆ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | 2018 ஆம் ஆண்டின் போது இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் முகவராண்மையிடமிருந்து அரசாங்க இணைய வழிப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் கீழ் ரூபா 3,048,117 பெறுமதியான தொடர்பாடல் உபகரணங்கள் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் அவற்றின் பெறுமதி நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில் லை. | இலங்கை அரசாங்க இணைய வழிப்படுத்தப்பட்ட செயற்திட்டம் திணைக்களத்திற்கு வழங்கிய Check Point 32000 வகையான Firewall உபகரணத்துடன் தொடர்புபட்ட ICTA நிறுவனத்தின் மூலம் வழங்கும் கட்டளை அல்லது அந்த உபகரணத்தின் பெறுமதி தொடர்பாக எங்களுக்கு எந்த தகவலும் கிடைத்திருக்கவில்லை. எனவே உரிய தொடர்பாடல் உபகரணம் நிதியற்ற சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை எனத் தெரிவிக்கிறேன். | உபகரணத்தின் பெறுமதியானது ICTA நிறுவனத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப் பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ii) | 2015, 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் கைதவிர்ப்புச் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்ட டோசர் இயந்திரம் புல்டோசர், பெக்கோலோடர், வைப்ரேடிங் ரோலர் ஆகிய 14 இயந்திரங்கள் நி.பி 770 (4)(அ) இன் பிரகாரம் கைதவிர்ப்புச் செய்யப்பட்டு ஏடுகளிலிருந்து | கைதவிர்ப்புச் செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட 14 இயந்திரங்களில் 09 இயந்திரங்கள் இதற்கு முன்னர் மதிப்பீடு செய்யப்பட்டு ஏல விற்பனை செய்வதற்காக முன்வைக்கப்பட்ட போதிலும் அந்த இயந்திரங்களானது கூடுதல் விலை மனுவைச் சமர்ப்பித்த கேள்விமனுதாரர்களினால் | கைதவிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு ஏடுகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நீக்கப்படாமையினால் நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் அவற்றின் பெறுமதி அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | கொள்வனவு செய்யப்படாததுடன் தற்பொழுது கைதவிர்ப்புச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட அனைத்து இயந்திரங்களையும் மீண்டும் மதிப்பீடு செய்து ஏலவிற்பனை செய்வதற்காக திணைக்கள பெறுகைக் குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. அந்த இயந்திரங்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டதன் பின்னர் நிதியற்ற சொத்துக்கள் கூற்றிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | |
| (iii) | கடந்த ஆண்டின் போது கொம்ப்ட்ரோலர் நாயகத்திற்கு அனுப்பப்பட்ட தகவல்களில் உள்ளடக்கப்பட்ட திணைக்களத்தின் 178 காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில் லை. | திணைக்களத்தின் மதிப்பீடு செய்யப்படாத ஏனைய காணிகளை மதிப்பீடு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. உரிமை உறுதிப்படுத்தப்படாத காணிகளின் உரிமையை பொறுப்பேற்கும் நடவடிக்கை அபிவிருத்திப் பிரிவின் மூலம் மாவட்ட மட்டத்தில் பிராந்திய அலுவலகங்களினூடாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பெறுப்பேற்கும் நடவடிக்கையை மேற்கொள்ளும் போது எதிர்பாராத நிலைமையின் காரணமாக அதிக காலம் எடுக்கும் பொறுப்பேற்றல் முடிவடைந்த உடன் உரிய பெறுமதியை முறைப்படியாக அறிக்கையிடுவதற்கு உரிய பிரிவிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | தாமதமின்றி காணியை மதிப்பீடு செய்து நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்குதல் வேண்டும். |
| (iv) | 47 களஞ்சியங்கள், 137 கமநல சேவை நிலையங்கள், 19 ஏனைய கட்டிடங்கள், 312 அலுவலக கட்டிடங்கள், 23 கடைகள், 30 உத்தியோகபூர்வ இல்லங்கள், 05 சுற்றுலா விடுதிகள், 27 கராஜ்கள், 36 ஏனைய வணிகக் கட்டிடங்கள், 03 இயந்திர நிலையங்கள்,02 ஆய்வுகூடங்களும் ஆராய்ச்சி கட்டிடங்களும், | மதிப்பீடு செய்யப்பட்ட கட்டிடங்கள் நிதியற்ற சொத்தக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய கட்டிடங்களை மதிப்பீடு செய்வதற்காக தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. உரிய மதிப்பீடு முடிவடைந்த கட்டிடங்களை தாமதிக்காது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | அனைத்து கட்டிடங்களையும் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 03 தலைமை அலுவலக கட்டிடங்கள் என்பவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதியற்ற சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | | |
| (v) | மீளாய்வாண்டின் போது நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றிற்கு (ஏசீஏ6) இணங்க ஆண்டின் போதான கொள்வனவுகளின் பெறுமதிக்கு ஆண்டிற்கான திருத்தம் செய்தல் செலவுகள் ரூபா 2,755,250 இனைக் காட்டியதன் காரணமாக ஆண்டிற்கான கொள்வனவுப் பெறுமதியானது அத்தொகையால் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டிற்கான நிதியற்ற சொத்துக்கள் கூற்றின் பிரகாரம் ஆண்டின் போதான கொள்வனவுகளின் பெறுமதியில் 2021 ஆம் ஆண்டிற்கான கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களை நடைமுறை வேலைப் பெறுமதியிலிருந்து குடியிருக்காத கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களின் பெறுமதிக்கு மாற்றப்பட்ட ரூபா 7,130,126 பெறுமதி மற்றும் இரத்தினபுரி மாவட்ட அலுவலகத்தின் பம்பரகொடுவ கமநல சேவை நிலையத்தின் திருத்தம் செய்யும் நடவடிக்கைகளுக்காக கட்டிடங்களை புனரமைத்தல் செலவு விடயத்தின் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள ரூபா 2,755,250 பெறுமதி உள்ளடக்கப்பட்டுள்ளது. CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் இப்பெறுமதி சரியாக 281-2-2-0-2001 ஆம் செலவு விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் நிதியற்ற சொத்துக்கள் கூற்றிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மிகையாகப் பதிவு செய்யப்பட்ட பெறுமதிகள் சரி செய்யப்பப்படாமையால் அம்மீதிகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vi) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொம்ப்ட்ரோலர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 1,760,597,708 ஆக இருந்த போதிலும் நடைமுறையற்ற சொத்துக்களின் அசைவு தொடர்பான அறிக்கையில் 2022 சனவரி 01 ஆந் திகதியில் அப்பெறுமதி ரூபா 842,167,013 ஆகக் காட்டப்பட்டிருந்ததன. காரணமாக கட்டிடங்களின் | கொம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகத்தினால் தகவல்களைச் சேகரிக்கும் போது உரிய நிலையத்தினால் மாவட்ட அலுவலகங்களுக்கு உரிய கட்டிடங்களின் பெறுமதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் முறைப்படியாக இச்சொத்துக்களை நிதியற்ற சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

பெறுமதி ரூபா 918,430,695 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களத்தினால் வழங்கிய நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **(அ) கமத்தொழில் சேவை நிலையத்தால் உணவுச்சாலைகள் மற்றும் One Stop shop நிர்மாணித்தல்** | | |
| (i) 118-2-3-20-2509 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் ரூபா 1,399,746 செலவு செய்து பாணந்துறை, கமத்தொழில் சேவை நிலையத்தில் நிர்ணயிக்கப்பட்ட உணவுச்சாலைக்கு மின்சாரம் வழங்காமையால் 2018 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படாது காணப்பட்டது. அவ்வாறே 2020 ஆம் ஆண்டின் போது அதன் மலசலகூடம் மற்றும் One Stop shop ஒன்றினை நிர்மாணிப்பதற்கு ரூபா 6,500,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் 2021 பெப்ரவரி முடிவுறத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் மாதம் வரை ரூபா 1,252,852 செலவு செய்து கொங்கிரீட் போடுதல் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் போது பாணந்துறை, One Stop shop இனை நிர்மாணிப்பதற்காக ரூபா 6,500,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,252,852 பணம் செலவு செய்து கொங்கிரீட் தள மட்டம் வரை நிர்மாணிக்கப்பட்டது. அமைச்சு நிதி ஏற்பாடு தாமதத்தினால் நிர்மாண வேலைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதுடன் நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் துரிதமாக பாணந்துறை One Stop shop இன் நிர்மாண வேலைகளை ஆரம்பிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | குறைபாடுகளை தயார் செய்து உணவுச்சாலை மற்றும் One Stop shop இனை தாமதமின்றி பாவனையாளர்களுக்காக திறத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2018 ஆம் ஆண்டின் போது கனன்வில கமத்தொழில் சேவை நிலையத்துடன் இணைந்ததாக ரூபா 1,506,720 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட உணவுச்சாலை 2023 மார்ச் 31 ஆந் திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கனன்வில கமத்தொழில் சேவை நிலையத்துடன் இணைந்ததாக நிர்மாணிக்கப்பட்ட உணவுச்சாலை சம்பந்தமாக பொதுச் சுகாதார பரிசோதகரினால் பொதுச் சுகாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படும் வகையில் சில மாற்றங்கள் தெரியப்படுத்தப்பட்டது. அந்த வித்தியாசங்களை மேற்கொண்டு துரிதமாக உணவுச்சாலையை திறப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | தாமதமின்றி உணவுச்சாலையை பாவனையாளர்களுக்காக திறத்தல் வேண்டும். |
| (ஆ) | 198-02-15-002-2506 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் கிராமத்துடன் நல்லுறவு என்ற செயற்திட்டத்தின் மூலம் ஹங்வெல்ல நகரத்தில் ஹாலி - எல மறுசீரமைப்புச் செய்யப்பட்ட முத்தெஸ்ஸ வயல்வெளியில் கைவிடப்பட்டுக் காணப்பட்ட 09 ஏக்கர் பரப்பளவினைக் கொண்ட பெலியத்த வயல் காணியை பயிர்ச் செய்கை பண்ணுவதற்காக ரூபா 1,200,00 நிதி ஏற்பாடு சீதாவக்க பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தி 05 ஏக்கர்கள் அளவில் துப்பரவு செய்து கால்வாய்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 845,648 பணம் செலவு செய்யப்பட்டிருந்தும் எதிர்பார்த்த எந்த அளவிலான வயல் காணியும் பயிர்ச் செய்கை பண்ணப்பட்டிருக்கவில்லை. | 2023/24 பெரும் போகத்தில் முத்தெஸ்ஸ வயல் வெளியில் பயிர்ச்செய்கை பண்ணுவதற்குத் திட்டமிடப்பட்டு அதற்காக விவசாயிகளினால் எழுத்துமூலம் இணக்கப்பாடு வழங்கப்பட்டிருந்தது. சிறு போகத்தில் பிராந்தியத்திற்கான அதிக மழையின் காரணமாக வெள்ளம் ஏற்படுவதனால் விவசாயிகள் வயல்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்வதனை தவிர்த்திருந்ததுடன் பெரும்போகத்தில் மாத்திரம் இந்த வயல் வெளியில் பயிர்ச்செய்கை பண்ணப்படுகின்றது என கொழும்பு மாவட்ட கமத்தொழில் அபிவிருத்தி உதவி ஆணையாளரால் தெரியப்படுத்தப்பட்டது. | தாமதமின்றி கைவிடப்பட்ட வயல் காணிகளில் பயிர்ச் செய்கை பண்ணுதல் வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | | | பெறுமதி<br>ரூபா | இணக்கமின்மைகள் | கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|---|
| **(அ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | | | | |
| | (i) | நி.பி 104(1) | 22,219,826 | ஒழுக்காற்று விசாரணைகளின் பிரகாரம் 23 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 22,219,826 பணம் 05 ஆண்டுகளிலிருந்து 18 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்தும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் மூலம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அறிக்கை கிடைக்காத ஒழுக்காற்று விசாரணை அறிக்கை பெற்றுக்கொள்ளப் பட்ட உடன் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அறவிட வேண்டிய அனைத்து பணத்தையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | அறவீடு செய்ய வேண்டிய பணத்தை தாமதமின்றி அறவீடு செய்தல் வேண்டும். |
| | (ii) | நி.பி 104(1) (அ) | | நட்டம் அல்லது சேதம் ஏற்பட்ட உடன் அதன் அளவு மற்றும் காரணத்தை உறுதியாக தெரிந்துகொள்வதற்கும் அதற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களையும் நிர்ணயித்துக் கொள்வதற்காக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது | மேலதிக நடவடிக்கைக்காக PF-8446 ஆம் இலக்க கெப் வாகனத்தை முறைப்படியாக ஒப்படைத்துள்ள உத்தியோகத்தர் தொடர்பான தகவல்கள், PJ-3251 ஆம் இலக்க வாகனத்திற்குரிய கடிதம் கிடைதத்த உடன் | விசாரணைகளை துரிதமாக மேற்கொண்டு நட்டத்தை அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | இடம்பெற்ற 08 வாகன விபத்துக்கள் சம்பந்தமாக உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். விசாரணைச் சபையினை நியமித்து இது சம்பந்தமாக முறையான நடவடிக்கைகளை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| (iii) | நி.பி 104 (2) | 978,013 | காணாமல் போகுதல்/ நட்டமடைதலின் பெறுமதி ரூபா 50,000 இற்கு மிகையாக இருக்குமாகவிருந்தால் அந்த அறிக்கையின் பிரதியை திறைசேரியின் பொது நிதித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்க வேண்டிய போதிலும் ரூபா 978,013 பெறுமதியினைக் கொண்டது என இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையானிால் (ICTA) சான்றுபடுத்திய Cheekpoint 3200 வகையான firewall உபகரணம் காணாமல் போயுள்ளமை தொடர்பான அறிக்கையின் ஒரு பிரதி 2023 மார்ச் 02 ஆந் திகதி வரை அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை அரசாங்க இணையதள செயற்திட்டத்தின் மூலம் கமத்தொழில் அபிவிருத்தி தீணைக்களத்திற்கு வழங்கிய Check Point 3200 வகையான Firewall உபகரணம் மற்றும் ஹம்பாந்தோட்டை ICTA நிறுவனத்தின் மூலம் வழங்கல் கட்டளை அல்லது அந்த உபகரணத்தின் பெறுமதி தொடர்பாக எங்களுக்கு எந்த தகவலும் கிடைக்க வில்லை. அதன் காரணமாக நி.பி 104(1)(அ) இற்கு இணங்க நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது. அந்த உபகரணத்தின் பெறுமதியை கண்டுபிடிப்பதற்கும் அது காணாமல் | நட்டத்தின் பெறுமதியை தாமதமின்றி தீர்மானித்து திறைசேரிக்கு அறிக்கையிடுவதும் நட்டத்திற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு நட்டத்தை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | போனமை சம்பந்தமாக இலங்கை பொலிசின் மூலம் விசாரணைகள் நடாத்தி குற்றவாளி மற்றும் உபகரணம் சம்பந்தமான தகவல்கள் எங்களுக்கு கிடைத்தன. அதன் பின்னர் நி.பி 104 இன் பிரகாரம் விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. அந்த உபகரணம் ரூபா 50,000 இற்கு குறைவானதா அல்லது அதிகமானதா என்பதனை முடிவுசெய்ய முடியாததனால் நி.பி 104 (2) இன் பிரகாரம் காணாமல் போனமை மற்றும் நட்டமடைந்தமை சம்பந்தமான அறிக்கையின் ஒரு பிரதியை திறைசேரியின் அரசாங்க நிதித் திணைக்களத்திற்கு அனுப்பவில்லை. | |
| (iv) | நி.பி 571 | 5,392,512 | 02 ஆண்டுகளை மிகைத்த வைப்புக்கள் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் மிளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கின் 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 5,392,512 வைப்புக்கள் சம்பந்தமாக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூன்றாந் தரப்பினர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக நிறுத்திவைக்கப்பட்ட ரூபா 5,392,512 வைப்பானது கட்டுநிதியைப் பெற்றுக்கொள்ளும் இயலுமையின் அடிப்படையில் எதிர்காலத்தில் தீர்த்துவைப்பதற்கு | காலாவதியான வைப்புக்கள் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் தீர்த்து வைக்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | |
| (v) | நி.பி 880(i) | 565 கமத்தொழில் சேவை நிலையங்களின் 349 கமத்தொழில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், 321 இலிகிதர்கள் மற்றும் 6,374 கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் பிணைப் பணத்தை வைப்புச் செய்திருக்கவில்லை. | உத்தியோகத்தர்கள் பிணைப்பணத்தினை வைப்புச் செய்வது சம்பந்தமாக வழிகாட்டிக் கோவை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் உரிய அறிவுறுத்தல்களின் பிரகாரம் பிணைப் பணத்தை வைப்புச் செய்தல் இடம்பெறுகின்றது எனத் தெரிவிக்கிறேன். | பிணைப் பணம் வைப்புச் செய்ய வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைவைப்பினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vi) | நி.பி - 1647 (ஆ) | வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான மீளாய்வானது 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | போக்குவரத்துப் பிரிவினால் திணைக்களத்தின் அனைத்து வாகனங்கள் தொடர்பாகவும் மாவட்ட அலுவலகங்களிடமிருந்து தகவல்களைப் பெற்று ஒவ்வொரு ஆண்டும் வாகனங்கள் தொடர்பான மீளாய்வு அறிக்கை தயாரிக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் அந்த அறிக்கை வருடாந்தம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான மீளபாய்வினை மேற்கொள்ளுதல் வேண்டும். |

**(ஆ) அரசாங்க நிருவாக சுற்றறிக்கை**

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 05/2018 (i) ஆம் இலக்க அரசாங்க நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு சுற்றறிக்கை | பிரசைகள்/ சேவை நாடுனர் நியதிச்சட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் பிரசைகள்/ சேவை நாடுனர் நியதிச்சட்டம் மற்றும் மனித வளங்கள் அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படவில்லை என ஏற்றுக்கொள்கிறேன். அதனைத் தயாரித்து முடிவுறுத்துமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் பிரசைகள்/ சேவைநாடுனர் நியதிச்சட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ii) | 2018 - சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை. | மனித வளங்கள் அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படவில்லை. | அதனைத் தயாரித்து முடிவுறுத்துமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் மனித வளங்கள் அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் 2018 ஏப்ரல் 27 ஆந் திகதிய 7/2018 ஆம் இலக்க திணைக்கள சுற்றறிக்கை | கமநல சேவைகள் பிராந்திய விவசாயக் குழுவின் மாவட்ட பிராந்திய பொறியிலாளரின், மாவட்ட தொழில் நுட்ப குழுவின், மாவட்ட விவசாயக் குழுவின் மற்றும் விவசாய அமைச்சின் தொழில்நுட்பக் குழுவின் சிபாரிசினைப் பெற்றுக்கொள்ளாது கம்பஹா கெப்படியாவத்த (புங்கிந்த) இன் 226.5 பேச்சர்ஸ் காணி அரலிய லேண்ட்ஸ் ஹோம்ஸ் | 2011 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி (திருத்திய) அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் வயல் காணியில் நெல் பயிர்ச் செய்கை | இக்காணியானது பீ தொகுதிக்குரிய (ஏனைய பயிர்களை பயிர்ச் செய்வலதனை மாத்திரம் மேற்கொள்ளலாம்) ஒரு காணியாக விளைச்சலினை மேம்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவின் |

| | | | |
|---|---|---|---|
| | தனியார் கம்பனிக்கு வியாபார நடவடிக்கைகளுக்கு பயன்படுத:துவதற்கு ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | பண்ணுவதனைத் தவிர்த்து ஏனைய செயற்பாடுகளுக்காக பயன்படுத்துவதற்கு அனுமதியினை வழங்கும் போது மேற்கூறிய தீர்மானத்தினை எடுப்பதற்காக கவனித்துப் பார்க்க வேண்டும் என்பது பொருத்தமானதா என்பதனை கமத்தொழில் அபிவிருத்தி ஆணையாளரினால் கருத்தில் கொண்டு சிபாரிசுகள் அறிக்கை மற்றும் தகவல்களைப் பெற்றுக்கொள்வது சம்பந்தமான ஆலோசனைகள் மற்றும் நடைமுறைகளை உள்ளடக்கி 2018-04-27 ஆந் திகதிய 7/2018 ஆம் இலக்க திணைக்கள சுற்றறிக்கை வழங்கப்பட்டது. கணக்காய்வு அறிக்கையில் காட்டப்பட்டுள்ள உரிய வேண்டுதலானது தொடக்கத்தில் நிராகரிக்கப்பட்டதுடன் அக்கம்பனியால் மீண்டும் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீட்டினை கவனித்துப் பார்ப்பதற்கு ஒரு விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது. அதன் சிபாரிசு திணைக்களத்தின் பணிப்பாளர் பொறியிலாளரின் | உதவி ஆணையாளரினால் 2022 யூன் 16 ஆந் திகதி தெளிவவாக இனங்காணப்பட்டு அறிக்கையிடப்பட்டுள்ளதனாலும் சுற்றறிக்கையிலும் மிகவும் தெளிவாக வயல் வெளியின் மத்தியில் அமைந்துள்ள கைவிடப்பட்ட வயல் காணி மற்றும் நீர் மூலத்திற்குரிய பாதுகாக்கப்பட்ட வலயத்தில் அமைந்துள்ள கைவிடப்பட்ட வயல் காணியை ஏனைய செயற்பாடுகளுகருக ஈடுபடுத்த வேண்டாம் எனக் காட்டப்பட்டிருந்ததனால் இந்த வீட்டினை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தை தடைசெய்வதற்கும் பிழைகளை மேற்கொண்ட அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

சிபாரிசு மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வழங்கப்பட்ட WPO/GQ/08/06/025/2022 ஆம் இலக்க 2022-03-08 ஆந் திகதிய கடிதத்தின் சிபாரிசு விவசாய அமைப்புக்களின் சிபாரிசு என்பவை உள்ளடங்கலாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களையும் கவனத்திற்கு எடுத்துக் கொண்டதன் பின்னர் குறித்த வயல் காணியை தொடர்ந்தும் நெற்பயிர்ச்செய்கைக்காக ஈடுபடுத்தும் இயலுமை இல்லாததனால் வேண்டிக் கொண்டவரினால் இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை, மற்றும் தொடர்புபட்ட ஏனைய அனைத்து நிறுவனங்களிடமிருந்தும் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதனை உள்ளடக்கி இன்னும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க உரிய அனுமதி

| | | | |
|---|---|---|---|
| | | | வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கிறேன். |

**(ஈ) அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவை**

| | | | |
|---|---|---|---|
| 2021 நவம்பர் 26 ஆந் திகதிய 2021/03 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவையின் 2.1 ஆம் பிரிவு | 2002 ஆம் ஆண்டிற்கான நிதிககூற்றுக்கள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் தமிழ் மொழியில் சமர்ப்பிக்கப்படவில்லை. | முகாமைத்துவத்தினால் கருத்துரைகள் தரப்படவில்லை. | நிதிக்கூற்றுக்கள் தமிழ் மொழி பெயர்ப்பு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

## 2.3 வங்கி கணக்கு செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) வழங்கப்பட்டு 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத 3,112,051 பெறுமதியான 336 காசோலைகள் சம்பந்தமாக நி.பி 396 (ஈ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்எடிருக்கவில்லை. | 2022-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு வழங்கப்பட்ட எனினும் கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாத 336 காசோலைகள் தொடர்பாக ரூபா 3,112,051 தொகை நி.பி 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து தீர்த்துவைக்குமாறு பொறுப்பு வகிக்கும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 396 (ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தலைமை அலுவலகத்தின் வங்கி கணக்கிணக்க கூற்றில் இனங்காணப்படாத பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 1,813,960 மீதியினுள் 11 காசோலைகள் காணப்பட்டதுடன் அவற்றினை முறையாக இனங்கண்டு வருமானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தலைமை அலுவலகத்தின் வங்கி கூற்றின் பிரகாரம் இனங்காணப்படாத பெறுவனவுகளில் 11 காசோலைகள் தொடர்பான ரூபா 1,813,960 பணத்தை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என தெரிவிக்கிறேன். | இனங்காணப்படாத பெறுவனவுகளை இனங்கண்டு வருமானத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 281-2-2-12-2506 ஆம் இலக்க செலவு விடயத்தின் மூலம் சிறிய நீர்ப்பாசன மற்றும் கைவிடப்பட்ட வயல் காணிகளை அபிவிருத்தி செய்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மொனராகலை மாவட்ட அலுவலகம் ரூபா 2,495,645 செலவு செய்து சாகினி குளத்தை புனரமைப்புச் செய்யும் விலைப்பட்டியலுக்காக பொறியிலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் பூர்த்தி செய்த வேலைகளுக்கான சிபாரிசு இல்லாது உதவி ஆணையாளரினால் கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாக மேற்கொண்ட பௌதீக பரீட்சிப்பின் போது குளக்கட்டில் வெடிப்புக்கள் ஏற்பட்டிருந்தமை, வான் கதவுகளுக்கு போடப்பட்டிருந்த கொங்கிரீட் வெடித்தமை, குளத்தின் அடித்தளமானது நீரினை கூடுதலாக சேகரிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்காமை போன்ற குறைபாடுகள் காணப்பட்டதனால் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய வகையில் குளம் புனரமைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | சாகினி குள செயற்திட்டத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 4,325,000 மதிப்பீடு செய்யப்பட்டு அதில் ரூபா 2,495,645 நிதி ஏற்பாடு 281-2-2-12-2506 செலவு விடயத்தின் மூலமும், ரூபா 1,597,201 பணம் உணவு மேம்பாட்டு சபையினாலும் வழங்குவதற்கு இணங்கிக் கொள்ளப்பட்டு ரூபா 500,000 மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க செலவுத் தலைப்பின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் புனரமைப்புச் செய்யப்பட்டு தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் பிராந்திய பொறியியலாளரின் சிபாரிசுடன் ரூபா 2,494,842 விலைப்பட்டியல் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அக்காசோலைகள் கணக்காய்விற்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. மண்ணின் தன்மையின் காரணமாக மேற்பரப்பிலுள்ள மண் தட்டானது வரட்சியான காலத்தில் வெடிப்புக்கள் ஏற்படும் தன்மை காணப்பட்டிருந்தும் குளக்கட்டின் மண் பொழிப்பு அறிக்கை வெற்றியளித்துள்ளது. வெடிப்புக்கள் உள்ள பகுதியானது மதிப்பீடு செய்யப்படாத மேலதிக பகுதியாக உள்ளதுடன் அதற்காக கொடுப்பனவுகள் செய்யப்படவில்லை. அப்பகுதி வான் கதவுக்கு பயணம் செய்வதற்காக நிர்மாணிக்கப்பட்டது. மிகுதிப்பணமான ரூபா 1,097,201 தொகை | பொறியியலாளர்களை உள்ளடக்கிய ஒரு குழுவின் மூலம் விசாரணை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கிடைக்காததனால் திட்டமிட்டவாறு வேலைகளை வினைத்திறனாக செயற்திட்டத்தினால் பூர்த்திசெய்வதற்கு முடியாதிருந்தது. குளத்தின் அடித்தளத்தை ஆழமாக்க முடியவில்லை. பின்னர் உணவு மேம்பாட்டு சபையுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் பின்னர் மிகுதி வேலைகளைச் செய்வதற்குத் தேவையான இணக்கப்பாடும் மேலதிக நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கிறேன். | |

### 3.2 வருடாந்த செயறலாற்றல் அறிக்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவு மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க நிதித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டிக் கோவை இலக்கம் 14 இல் குறிப்பிட்ட படிவத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்குகளுடன் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்கான வருடாநத செயலாற்றல் அறிக்கைக்காக பிரிவின் மூலம் தகவல்கள் கோரப்பட்டு தயாரிக்கப்பட்டு வருவதுடன் துரிதமாக முடிவுறுத்தி கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | செயலாற்றல் அறிக்கையினை கணக்குகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஆ) 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிகையின் 12.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களையும் வருடாந்த செயலாற்றல் அறிக்கையையும் தயாரித்து கணக்காய்வு அறிக்கையையும் உள்ளடக்கி அனைத்து கணக்கீட்டு | 2010, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் செயலாற்றல் அறிக்கையானது நாட்டில் உருவாகியுள்ள நிலைமை மற்றும் சிக்கலின் காரணமாக தயாரிப்பதற்கு தாமதமடைந்துள்ளதுடன் அமைச்சு மாற்றமடைந்ததன் காரணமாக அங்கீகாரத்தினை வழங்குவதும் | வருடாந்த செயலாற்றல் அறிக்கையினை மூன்று மொழிகளிலும் தயாரித்து பாராளுமன்றத்தில் முன்வைத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| உத்தியோகத்தர்களாலும் வருடாந்த செயலாற்றல் அறிக்கையை மூன்று மொழிகளிலும் தயாரித்து நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்கள் கடப்பதற்கு முன்னர் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தின் 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாமதமடைந்துள்ளது. அநத ஆண்டுகளுக்குரிய செயலாற்றல் அறிக்கைகளின் நடவடிக்கைகளும் இறுதிக் கட்டத்தில் காணப்பட்டதனால் அந்த ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். |

### 3.3 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கையின் உலர் வலயத்தில் மழை வீழ்ச்சி குறைவான காலத்தில் குறைந்த அளவான நீரில் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு மற்றும் மின்வலுச் சிக்கலுக்கான தீர்வாக சூரிய சக்தியில் செயற்படும் நீர்ப்பம்பிகள் மற்றும் பாய்ச்சல் நீர் தொழில்நுட்பத்தினை ஈடுபடுத்துவதற்காக 2005 -2008 ஆம் ஆண்டுகளின் போது வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் விவசாய அமைச்சுக்கு வழங்கிய ரூபா 2,327,272,272 நிதி எற்பாட்டிலிருந்து 19 கமத்தொழில் சேவைகள் நிலையத்திற்கு 7,231 சூரியசக்தி சிறிய நீர் முறைமை வழங்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டின் இறுதியில் இந்த முறைமைக்கான அனைத்து பணமும் அறவிடப்பட்டு முடிவுறுத்தப்பட வேண்டுமென திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விலாசமிடப்பட்ட 2020 யூலை 03 ஆந் திகதிய | 7/5/19-2021-1 ஆம் இலக்க 2023-03-23 ஆந் திகதிய படிகத்தின் மூலம் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கான பிரதியுடன் செயலாளர் விவசாய அமைச்சிற்கு தெரியப்படுத்தப்பட்டது. நிலைபேறான விவசாய நீர் முகாமைத்துவ செயற்திட்டம் தொடர்பாக சூரிய சக்தி சிறிய நீர் முறைமையினை ஸ்தாபிக்கும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக கமத்தொழில் சேவைக் குழுவின் கணக்குகளில் நிறுத்திவைக்கப்பட்ட பணத்தில் ரூபா 5,827,895 தொகை விவசாய அமைச்சிற்கு அனுப்புவதற்குரிய அறிக்கை அனுப்பிவைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகம் மற்றும் கமநல சேவை நிலைய அவதானிப்பின் போது மற்றும் அறிக்கையின் அவதானிப்பின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் காட்டப்பட்டுள்ளன. | உடன்படிக்கையின் பிரகாரம் அறவிட வேண்டிய அனைத்து பணத்தையும் துரிதமாக அறவிட வேண்டியதுடன் முறைமை காணாமல் போயுள்ளமை சம்பந்தமாக விசாரணைகள் நடாத்தப்படுதல் வேண்டும். |

கடித்தின் மூலம் இன்னும் அறவிட வேண்டிய பணம் ரூபா 2,264,753,696 என குறிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் வழங்கப்பட்டிருந்த முறைமைகளில் 90 சதவீதமானவை காணாமல் போயிருந்தமை தவறான முறையில் பயன்படுத்தியிருந்தமை விவசாயிகளின் தகவல்களைத் தேடிக்கண்டுபிடிக்காமை மற்றும் செயற்படாது காணப்பட்டமையால் அக்கடன் மீதியை அறவிட முடியாது என கமத்தொழில் அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினால் திறைசேரிக்கு தெரியப்படுத்தப்பட்டது.

**(ஆ) உலக வங்கி உதவயின் கீழ் கொவிட் 19 அவசர நிலைமையின் அடிப்படையில் களஞ்சிய வசதிகளை உருவாக்குதல்**

| | | |
|---|---|---|
| ‘‘உணவுப் பாதுகாப்பினை சான்றுபடுத்தல் மற்றும் பயிர் விளைச்சலுக்கான முறையான விலையினைப் பெற்றுக்கொள்ளல்’’ தொடர்பான தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேலதிகப் பயிர்களுக்காக குறுங்கால களஞ்சிய வசதிகளை வழங்குவதற்கு உலக வங்கி கடனின் CERS (Contingent Emergency Response Component ) கீழ் ரூபா 223,170,000 செலவு செய்து 11 மாவட்ட அலுவலகங்களை உள்ளடக்கும் வகையில் 26 களஞ்சியங்கள் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்திசெய்து முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை 15 களஞ்சியங்களை நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் | ஏனைய சிறுபயிர் களஞ்சியங்களை நிர்மாணித்து முடிவுறுத்தப்பட வேண்டியது 2023-03-31 ஆந் திகதியாக இருந்ததுடன் 26 களஞ்சியங்களை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தும் 11 களஞ்சியங்களை மாத்திரம் நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்தது. 2022-12-31 ஆந் திகதியில் 02 களஞ்சியங்களின் வேலைகள் முடிவடைந்துள்ளதுடன் தற்பொழுது மிகுதி 09 களஞ்சியங்களினதும் வேலைகள் முழுமையாக பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. | மேலதிக பயிர்களை களஞ்சியப்படுத்துதல் அல்லது அவ்வாறான தேவைப்பாடு இல்லையாயின் ஏனைய பொருத்தமான நடவடிக்கைகளுக்காக உபயோகப் பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்ட 11 களஞ்சியங்களில் ஒரு களஞ்சியத்தின் வேலை முடிவடைந்திருக்கவில்லை. நிர்மாண வேலை முடிவடைந்த 10 களஞ்சியங்கள் அந்த அறிக்கைத் திகதியில் பயன்படுத்தப்படாது காணப்பட்டன. | | |

### 3.4 உள்நாட்டு நிதியை ஈடுபடுத்தும் செயற்திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சிறிய நீர்ப்பதாசனங்களை புனரமைத்தல் மற்றும் கைவிடப்பட்ட வயல் காணிகளில் பயிர்ச் செய்கை பண்ணல், செலவு விடயத்திலிருந்து ரூபா 5,266,478 பணம் தொலைபேசி பட்டியல்களைத் தீர்த்தல், வெளிநாட்டுப் பயணங்களுக்கான கைச் செலவுப் படிகளைச் செலுத்துதல், கமரா முறைமையைப் பொருத்துதல், கேட்போர்கூட முறைமையை ஸ்தாபித்தல் போன்ற ஏனைய செலவுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. | தலைப்பிற்குரிய விடயங்களின் பிரகாரம் போதியளவான பதில் அறிக்கையினைச் சமர்ப்பிப்பதற்கு முடியாதுள்ளதுடன் அந்த அவதானிப்புக்கள் தொடர்பான ஒரு விபரமான அறிக்கை வழங்கப்படுமாகவிருந்தால் அது சம்பந்தமாக விளக்கமளித்தலினை சமர்ப்பிக்க முடியும் என தயவாக தெரிவிக்கிறேன். | செயற்திட்டத்திற்குரிய நிதி ஏற்பாட்டினை அதற்காகவே ஈடுபடுத்துதல் வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | உலக உணவு செயற்திட்டத்திடமிருந்து திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த CR-0098 ஆம் இலக்க ஜீப் வண்டி 2015 ஆம் ஆண்டில் பதிவு செய்ததன் பின்னர் பயன்படுத்தப்படாது மாலபே வாகன நிலையத்தில் விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | உலக உணவு செயற்திட்டத்தின் மூலம் வழங்கி சுங்க கட்டணமின்றி நாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்வதற்காக கொம்ப்ரோலர் நாயகத்தின் மூலம் சுங்க வரியினை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் அது வெற்றியளித்திருக்கவில்லை. இது மிகவும் பழைய வாகனம் என்பதனால் புதிய சுங்க கட்டணத்தை கணித்து தருமாறு விவசாய அமைச்சின் செயலாளரின் மூலம் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. | பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாததாக இருப்பின் கைதவிர்ப்புச் செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அதற்கு முறையான பதில் பெற்றுக்கொள்ளப்பட்ட உடன் வாகனத்தை பதிவுசெய்து கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | |
| (ஆ) | 25 கமநல சேவை நிலையங்களின் 165 எண்ணிக்கையான 04 சக்கர உழவு இயந்திரங்கள், 37 எண்ணிக்கையான 02 சக்கர உழவு இயந்திரங்கள், 115 உழவு இயந்திர பெட்டிகள், 77 வேளாண்மை வெட்டும் இயந்திரங்கள், 264 தட்டுக்கலப்பைகள்/ முள்ளு கலப்பைகள், 350 சேற்று வீல்கள், 19 கூட்டிணைந்த அறுவடை இயந்திரங்கள், 720 ஏனைய உபகரணங்கள் என்பன 07 ஆண்டுகளிலிருந்து 25 ஆண்டுகள் வரையான காலமாக செயற்பாடற்றும் பயன்படுத்தப்படாதும் காணப்பட்டன. | 2022-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு கமத்தொழில் சேவை நிலையங்களிடம் காணப்பட்ட விவசாய துணைக் கருவிகளுக்கு மத்தியில் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத மட்டத்தில் காணப்பட்ட விவசாய உபகரணங்கள் கைதவிர்ப்புச் செய்வதற்காக ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளன. | கைதவிர்ப்புச் செய்தல் வேண்டும். |
| (இ) | 2020 மார்ச் மெய்மையாய்வுச் சபையின் மூலம் ஏலவிற்பனை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த வாகனங்களுக்கு மத்தியில் 04 வாகனங்கள் ஏல விற்பனை செய்யப்படாது திருத்தம் செய்து மீண்டும் பயன்படுத்துமாறு 2020 செப்தெம்பர் 21 ஆந் திகதி மதிப்பீட்டுச் சபையினால் உத்தேசிக்கப்பட்டிருந்தும் 02 வாகனங்கள் திருத்தம் செய்யப்படாது மாலபே வாகன தரிப்பிடத்தில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையும் விளைவற்றுக் காணப்பட்டது. | மதிப்பீட்டுச் சபையினால் திருத்தம் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட வாகனங்கள் 04 ஆகும். இந்த வாகனங்களுக்கு மத்தியில் 32-6627 ஆம் இலக்க வாகனம் பதுளை மாவட்ட அலுவலகத்திற்கும் 32-7684 ஆம் இலக்க வாகனம் தலைமை அலுவலகத்தின் வாகன குழாமிற்கும் 51-7033 ஆம் இலக்க வாகனம் கம்பஹா மாவட்ட அலுவலகத்திற்கும் 227-3342 ஆம் இலக்க லொறியினை திருத்தம் செய்து தலைமை அலுவலகத்தின் லொறி குழாமிற்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டது. | வாகன நிலையத்தில் உள்ள இந்த வாகனங்களை திருத்தம் செய்து பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றிறக்கையின் பிரகாரம் செலவு செய்யும் போது மற்றும் உள்நாட்டு நிதியத்தை பயன்படுத்தி மேற்கொள்கின்ற | உரிய இயந்திரங்களை மாவட்ட மட்டத்தில் அபிவிருத்தி செய்து செயற்திட்டங்களை மேற்கொள்ளும் தேவைப்பாட்டின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டதுடன் உரிய மாவட்டங்களுக்கு | அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டங்களின் போது வேலைகள் மற்றும் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக (பாதீட்டு பிரேரணைகளை உள்ளடக்கி) பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள/ ஆரம்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட அனைத்து செயற்திட்டங்களையும் தற்காலிகமாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென காட்டப்பட்டிருந்தும் 281-2-2-0-2103 ஆம் இலக்கத்தின் கீழ் ரூபா 5,902,110 செலவு செய்து 04 கொங்கிரீட் கலவைகள், 06 கொங்கிரீட் போக்கர் மெசின்கள், 06 சொயிஸ் வைப்ரேடிங் ஹெமர்கள் என்பன மிகவும் அவசரமான நடவடிக்கையாகக் கருதி 2022 திசெம்பர் 28 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டது. மேலும் அந்த இயந்திரங்கள் 2023 யூன் 15 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது மலெபே களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. | பகிர்ந்தளிக்கும் நடவடிக்கை துரிதமாக மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கிறேன். | |
| (உ) | மாத்தளை மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அலுவலகங்களின் 08 வாகனங்கள் 01 ஆண்டிலிருந்து 04 ஆண்டுகள் வரையான காலமாக செயற்படுத்துவதிலிருந்து நீக்கப்பட்டு இருந்தன. | இந்த வாகனங்களுக்கு மத்தியில் 04 வாகனங்களின் தகவல்கள் பின்வருமாறாகும்.<br><br>01 - 32-7705 ஆம் இலக்க வாகனம் திருத்தம் செய்து ஓடுவதற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளது.<br><br>02 - 32-6603 ஆம் இலக்க 33 ஆண்டுகள் பழைமையான இந்த வாகனத்தை கைதவிர்ப்புச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.<br><br>03 - 32-1469 ஆம் இலக்க 35 ஆண்டுகள் பழைமையான இந்த வாகனத்தை கைதவிர்ப்புச் செய்வதன் மூலம் | திருத்தம் செய்து ஓடுவதற்கு ஈடுபடுத்துதல் அல்லது கைதவிர்ப்பச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல், உரிமை திணைக்களத்திடம் இல்லாத வாகனங்களை பொறுப்பேற்பதற்கு அல்லது உரிமையுள்ள தரப்பினர்களுக்கு உரிய மோட்டார் சைக்கிள்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | விற்பனை செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.<br><br>04 - 57-9438 இந்த 32 ஆண்டுகள் பழைமையான வாகனத்தை கைதவிர்ப்புச் செய்வதன் மூலம் விற்பனை செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.<br><br>இந்த வாகனங்களுக்கு மத்தியில் ஏனைய 04 வாகனங்கள் நிலையான கமத்தொழில் நீர் முகாமைத்துவ செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களின் உரிமை எங்கள் திணைக்களத்திற்கு இல்லாததனால் கைதவிர்ப்புச் செய்வதற்கு அல்லது திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு முடியாதுள்ளது. அதற்கிணங்க உரிய மோட்டார் சைக்கிள்களின் உரிமையை திணைக்களத்திற்குப் பொறுப்பேற்பதற்கு அல்லது உரிமையுள்ள தரப்பினர்களுக்கு உரிய மோட்டார் சைக்கிள்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஊ) | முல்லைத்தீவு மாவட்ட அலுவலகத்தின் மொத்தமாக ரூபா 399,950 பெறுமதியான 02 போட்டோ பிரதி செய்யும் இயந்திரங்கள், 02 கணனிகள், 01 HP Laser Jet என்பன 03 ஆண்டுகள் காலமாக விளைவற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டும் காணப்பட்டன. | கணக்காய்வு அவதானிப்புக்களை குறித்துக் கொண்டுள்ளேன். உரிய அலுவலக உபகரணங்களை திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு அல்லது அவ்வாறு செய்ய முடியவில்லையாயின் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | இந்த உபகரணங்கள் பயன்படுத்தப்படவில்லையாயின் கைதவிர்ப்புச் செய்தல் வேண்டும். |
| (எ) | நீர் முகாமைத்துவ பிரிவிற்கு தேவையானதாக வெளிப்படுத்தப்பட்டு 2019 ஆம் ஆண்டின் போது கொள்வனவு | இந்த உபகரணங்கள் தேவைப்பாட்டிற்கு இணங்க மாவட்டத்திற்கு வழங்குவதற்கு அதேபோல நீர் முகாமைத்துவ | இந்த உபகரணங்கள் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்ட ரூபா 25,822,137 மொத்த தொகையான மண்ணை தோண்டும் உபகரணம், நீரின் தரத்தினை அளவீடு செய்யும் உபகரணத் தொகுதி, மண்ணை அள்ளுவதற்குத் தேவையான சல்லடைகள், Topcon Auto Level, Aluminium Telescopic Tripod, Soil Auger set, Current Velocity Meter ஆகிய உபகரணங்கள் கொள்வனவு செய்த திகதியிலிருந்து 2023 மார்ச் 31 ஆந் திகதி வரை பயன்படுத்தப்படாது காணப்பட்டன. | பயிற்சி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும். | |
| (ஏ) | 281-02-02-12-2506 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டில் விவசாய கண்காட்சிகளில் நீர் முகாமைத்துவம் தொடர்பான தகவல்களை காட்சிப்படுத்துவதற்காக 65 அங்குலமான Digital Smart UHD LED தொலைக்காட்சி இயந்திரம் ரூபா 500,000 தொகைக்கும் 281-02-02-12-2507 ஆம் இலக்க ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவு விடயத்தின் கீழ் சிறிய நிர்ப்பாசனங்களின் வெள்ள நிலைமையை காட்சிப்படுத்தும் வேலைத்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக பெனசொணிக் வகையான 49 அங்குல LED Display Monitor, 04 எண்ணிக்கையானவை 2019 பெப்ரவரி 26 ஆந் திகதி ரூபா 701,258 தொகைக்கு கொள்வனவு செய்து நீர் முகாமைத்துவ பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் கணக்காய்வுத் திகதியான 2023 பெப்ரவரி 07 ஆந் திகதி வரையும் கொள்வனவு செய்த குறிக்கோளுக்கு அந்த உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 65 அங்குல Digital Smart UHD LED தொலைக்காட்சி இயந்திரங்கள் இரண்டில் 01 இயந்திரம் மற்றும் 49 அங்குலமான 04 LED Display Monitors பிரதான கேட்போர் கூடத்தில் மற்றும் வரவேற்று பிரிவின் அருகில் பொருத்துவதற்காக கட்டுப்பாட்டு பிரிவிற்கு தற்காலிகமாக வழங்கப்பட்டிருந்ததுடன் ஆணையாளரின் (மனிதவளங்கள் அபிவிருத்தி) 7/2/1 ஆம் இலக்க 2023-02-13 ஆந் திகதிய கடிதத்திற்கு உரிய குழு அறிக்கைக்கு இணங்க மற்றும் நீர் முகாமைத்துவ பிரிவின் வருடாந்த பதிவேட்டுப் பொருள் மெய்மையாய்வின் 2022 ஆம் அறிக்கைக்கு இணங்க நிரந்தரமாக இந்த தொலைக்காட்சிகளை கட்டுப்பாட்டுப் பிரிவிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரியப்படுத்தப்பட்டிருந்ததனால் அந்த தொலைக்காட்சிகளை கட்டுப்பாட்டுப் பிரிவிற்கு வழங்குவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மற்றைய 65 அங்குல Digital Smart UHD LED தொலைக்காட்சி இயந்திரம் நீர் முகாமைத்துவ | இவ்வாறான சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் மீண்டும் இடம்பெறாதிருத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பிரிவில் பொருத்தபபட்டுள்ளதுடன் விபரமான அறிக்கையை காட்சிப்படுத்துதல், நாளாந்த மழைவீழ்ச்சி தரவுகளை காட்சிப்படுத்துதல், தரவு அடிப்படையினைத் தயாரித்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக தற்பொழுது பயன்படுத்தப்படுகின்றன. | |
| (ஐ) 2012 யூன் 20 ஆந் திகதிய DMS/G2/56/01 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடித்தின் பிரகாரம் சீன அரசாங்கத்தினால் வழங்கிய இயந்திரங்களுக்காக 05 நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்கள், 05 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் (இயந்திரம்) மற்றும் 08 தொழில்நுட்பவியலாளர்களைச் (இயந்திரம்) சேர்த்துக்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை 10 ஆண்டுகளுக்குள் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது அந்த உத்தியோகத்தர்களை பயிற்றுவிப்பதற்காக இயந்திர அத்தியட்சகரின் (ஓய்வுபெற்றவர்) சேவையை மீளப் பெற்றுக் கொள்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. | சீன அரசாங்கத்தினால் வழங்கிய சில இயந்திரங்களான கொம்பயின் மற்றும் செஸ்ட்ர் ட்ரக்டர் இயந்திரம், பிரைம்மூவர் வாகனம்/ டோஸர் இயந்திரம் என்பன திணைக்களத்தின் தேவைப்பாட்டிற்கு பொருத்தமானதாக இல்லாததன் அடிப்படையில் ஏனைய நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டன. | அங்கீகரித்த பதவிகளுக்கு நிரந்தர உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும். |

**3.6 கணக்காய்வு ஐயவினாவிற்கு பதில் வழங்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திணைக்களத்திற்கு 2019 கணக்காண்டிற்காக வழங்கப்பட்ட 50 கணக்காய்வு ஐய வினாக்களும் 2020 ஆம் ஆண்டின் 62 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும், 2021 ஆம் ஆண்டின் 66 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் மற்றும் | நாடுமுழுவதும் பரவிக் காணப்படும் 562 கமநல சேவை நிலையங்களினாலும் 25 மாவட்ட அலுவலகங்களின் மூலமும் கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் பொதுமக்களுக்கு சேவைகளை | நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்கப்படுதல் வேண்டும். |

மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட 148 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் 2023 மார்ச் 31 ஆந் திகதி வரை பதில் அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

வழங்குகின்றன. மாவட்ட அலுவலகங்கள் மற்றும் கமநல சேவை நிலையங்கள் தொடர்பாக மாவட்டத்தின் கணக்காய்வு அத்தியட்சர்களின் மூலம் கணக்காய்வு செய்து கணக்காய்வு ஐய வினாக்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக தலைமை அலுவலகத்தின் அரசாங்க கணக்காய்வு பிரிவின் மூலமும் உரிய மாவட்ட அலுவலகங்கள் மற்றும் கமநல சேவை நிலையங்களை கணக்காய்வு செய்து கணக்காய்வு ஐய வினாக்கள் அனுப்பிவைக்கப்படுகின்றன. இவ்வாறு சமர்ப்பிக்கப்படுகின்ற அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கான உரி விளக்கமளித்தல்கள் மாவட்ட அலுவலகங்கள் மற்றும் உரிய கமநல சேவை நிலைங்களிலிருந்து பெற்று பதில்கள் கோவை செய்யப்படுதல் வேண்டும். சில கணக்காய்வு ஐய வினாக்களுக்காக தேவையான விளக்கமளித்தல்களைப் பெற்று பகுப்பாய்வு செய்வதற்கு எடுக்கும் காலமானது பதில் வழங்குவதற்கு வழங்கப்பட்டுள்ள காலத்திற்குள் வழங்குவது நடைமுறைச் சாத்தியமற்றதாகும். எனவே நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் பதமிலினை வழங்குவதலானது சில சந்தர்ப்பங்களில் தாமதமடைதல் காணக்கூடியதாக உள்ளது. எவ்வாறாயினும் தற்பொழுது இறுதியான பதில் வழங்குவதற்கு தாமதமடைந்துள்ள கணக்காய்வு ஐய வினாக்களுக்காக உரிய பதில் தயாரிக்கப்பட்டு வருவதுடன் துரிதமாக பதிலை வழங்குவதற்கு உள்ள அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்காகவும் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என தெரிவிக்கிறேன்.

## 3.7 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2015/2016 ஆம் ஆண்டுகளின் போது விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து அனுராதபுரம் மாவட்ட அலுவலகத்திற்கு சோளப் பயிர்ச் செய்கைக்காக 5386 விவசாயிகளுக்கு 06 மாதங்களில் அறவீடு செய்யும் அடிப்படையில் ரூபா 80,790,000 வழங்கி 05 ஆண்டுகள் கடந்திருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய பணம் ரூபா 16,596,395 ஆகும். இக்கடன் பணத்தில் 531 விவசாயிகள் எந்த தவணைப் பணத்தையும் செலுத்தியிருக்காதததுடன் கடனை திருப்பி செலுத்தாமை சம்பந்தமாக கமத்தொழில் இணக்க சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தும் உரிய கடன் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2015/2016 விசேட சோளம் செயற்திட்டத்தின் கீழ் விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து அனுராதபுரம் மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 5386 விவசாயிகளுக்கு ரூபா 80,790,000 பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் அப்பணத்தில் 2023-05-15 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 64,981,115 அறவீடு செய்ய வேண்டிய பணம் ரூபா 15,808,885 ஆகும். | தொடர்ச்சியான பின் தொடர் நடவடிக்கை எடுத்து துரிதமாக கடனை அறவீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | 2020/2021 ஆம் ஆண்டின் போது விவசாயிகளின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து விசேட சோளப் பயிர்ச் செய்கைக்காக ரூபா 200,000,000 பணம் வழங்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அறவிட வேண்டிய பணம் ரூபா 13,761,453 (வட்டியைத் தவிர்த்து) என அவதானிக்கப்பட்டது. | 2020/2021 ஆம் ஆண்டுகளில் விவசாயிகளுக்கு சோளபர் பயிர்ச்செய்கைக்காக இந்த நிதியத்திலிருந்து வழங்கிய பணத்தில் ரூபா 13,395,208 பணம் இன்னும் அறவிட வேண்டியிருந்தது. | தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கை எடுத்து துரிதமாக கடனை அறவீடு செய்தல் வேண்டும். |
| (இ) | 2020 ஆம் ஆண்டின் போது விதை நெல்லினைப் பெற்றுக்கொள்வதற்காக விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து ரூபா 25,000,000 பணம் 06 மாதங்களில் அறவீடு செய்யும் அடிப்படையில் | 2020 ஆம் ஆண்டில் விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து விதை நெல்லைப் பெற்றுக்கொள்வதற்காக வழங்கப்பட்ட ரூபா 25,000,000 பணத்தில் 2023-05-17 ஆந் திகதியில் உள்ளவாறு கண்டி | தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கை எடுத்து துரிதமாக கடனை அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இன்னும் அறவிட வேண்டிய பணம் ரூபா 4,306,145 என அவதானிக்கப்பட்டது. | மாவட்டத்திலிருந்து ரூபா 2,978,928 தொகையும் மாத்தறை மாவட்டத்திலிருந்து ரூபா 210,000 தொகையும் அறவி வேண்டியவைகள் ஆகும். அதற்கிணங்க ரூபா 3,188,928 அறவிட வேண்டிய பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (ஈ) | சேதனப் பசளையை மேம்படுத்தும் குறிக்கோளில் அமுல்ப்படுத்தப்பட்ட ‘‘சாரங்கா’’ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2016, 2017, 2018 ஆகிய ஆண்டுகளில் 21 மாவட்ட அலுவலகங்களில் 318 விவசாயிகளுக்கு ரூபா 69,850,000 கடன்பணம் விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து கிடைத்து அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இன்னும் அறவிட வேண்டிய பணம் ரூபா 21,029,067 ஆகும். இக்கடன் பணத்தை அறவீடு செய்தல் மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது. | ‘‘சாரங்கா’’ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது விவசாயிகளுக்கு வழங்கிய பணத்திலிருந்து 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த ரூபா 21,029,067 பணத்தில் 2023 மே 15 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 3,542,646 பணம் அறவிடப்பட்டுள்ளதுடன் இன்னும் ரூபா 17,486,421 பணம் அறவிட வேண்டியுள்ளது. அறவிட வேண்டியுள்ள கடனை அறவீடு செய்வதற்காக பொறுப்புக்கூற வேண்டிய அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கை எடுத்து துரிதமாக கடனை அறவீடு செய்தல் வேண்டும். |
| (உ) | 2000/2007 காலத்தின் போது கொள்வனவு செய்வதற்காக முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்த பதுளை மற்றும் அனுராதபுரம் மாவட்ட அலுவலகங்களிலிருந்து அறவீடு செய்து திறைசேரிக்கு தீர்த்துவைக்கப்பட வேண்டிய பணம் ரூபா 12,552,764 தொகையை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதுளை மற்றும் அனுராதபுரம் மாவட்ட அலுவலகங்கள் நெல் கொள்வனவு செய்வதற்கான முற்பணங்கள் சம்பந்தமாக மாவட்டத்தின் மூலம் அறிக்கை கோரியிருந்ததுடன் அத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தற்பொழுது பொழிப்பு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதனால் அச்செயற்பாடு முடிவடைந்த உடன் அரசாங்க கணக்குகள் பணிப்பாளர் நாயகம், அரசாங்க கணக்குகள் திணைக்களத்திற்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்க கணக்குகள் திணைக்களத்திற்கு உரிய கடன் பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | இலங்கை அரசாங்க இணையதள செயற்திட்டத்தின் மூலம் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த வயர் இல்லாத இணையதளமுறைமை ரூபா 978,013 பெறுமதியானது என இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையால் (ICTA) சான்றுபடுத்திய Checkpoint 3200 வகையான Firewall உபகரணம் 2020 ஆம் ஆண்டின் மார்ச் 15 ஆந் திகதி காணாமல் போனமை சம்பந்தமாக 2022 ஏப்ரல் 22 ஆந் திகதி வழங்கிய தொடக்க புலனாய்வு அறிக்கையின் பிரகாரம் அந்த நட்டத்தை பிரதம பொறியியலாளரிடமிருந்து அறவீடு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தும் தொடக்க புலனாய்வு நடவடிக்கை தாமதமடைந்ததனால் 2/17 ஆம் இலக்க ஓய்வூதிய தொகுப்பின் மூலம் 2020 நவம்பர் 10 ஆந் திகதி அந்த உத்தியோகத்தர் ஓய்வுபெற்றிருந்தார். அவ்வாறே அவருக்கு பதவியுயர்விற்குரிய நிலுவைச் சம்பளம் மற்றும் பதவியுயர்வு பெற்ற உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் ஈடுபடுத்தும் போது செலுத்த வேண்டிய படியாக ரூபா 1,469,725 தொகை 2022 திசெம்பர் மாதம் செலுத்தும் போது மேற்கூறிய நட்டத்திற்காக உரிய உத்தியோகத்தரினால் செலுத்த வேண்டிய பணத்தை நிறுத்தி வைத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஓய்வூதிய சேவை நியதிச்சட்ட கோவையின் 43(அ) பிரிவின் கீழ் ஓய்வுபெற்ற உத்தியோகத்தரிடமிருந்து ஏதாவது அறவீட்டினை மேற்கொள்வதாயின் அதனை ஓய்வூதியத்திலிருந்து அறவீடு செய்தல் வேண்டும். எனவே பிரபாத் விதாரண அவர்களுக்கு தகமையுள்ள நிலுவைச் சம்பளத்திலிருந்து அறவீடு செய்யும் அதிகாரம் திணைக்களத்திற்கு இல்லை. மேலும் அரசியலமைப்பின் 13 ஆம் இலக்கத்தின் 05 ஆம் பிரிவின் கீழ் குற்றவாளி என நிரூபிக்கப்படும் வரை அனைத்து நபர்களும் குற்றமற்றவர் என ஊகித்துக்கொள்ளுதல் வேண்டும். பிரபாத் விதாரண அவர்கள் தொடக்க புலனாய்வு அறிக்கையின் பிரகாரம் ஒரு உத்தியோகத்தரினை குற்றவாளியாக்க முடியாததுடன் அதற்காக முறையான ஒழுக்காற்று விசாரணைகளின் மூலம் உத்தியோகத்தரை குற்றவாளியாக்குதல் வேண்டும். அதற்கிணங்க குற்றவாளி என நிரூபிக்கப்படாத உத்தியோகத்தரிடமிருந்து உரிய அறவீட்டினை மேற்கொள்ள முடியாது. உத்தியோகத்தர் ஓய்வுபெறுவதற்காக அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் ஓய்வுக்கான அங்கீகாரத்தினை வேண்டுவதற்குரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் குற்றவாளி என அடையாளம் காணப்பட்டிருக்காததனால் ஓய்வுபெறும் சந்தர்ப்பத்தில் எந்த ஒழுக்கச் சிக்கலும் காணப்பட்டிருக்காததனால் உத்தியோகத்தர் ஓய்வூதிய நியதிச்சட்ட கோவையின் 2 மற்றும் 12 ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஓய்வுபெறும் தேவைப்பாடு காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | நட்டத்திற்கு பொறுப்க்கூற வேண்டிய ஓய்வுபெற்ற உத்தியோகத்தரிடமிருந்து அறவீடு செய்வதற்கு சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | 2021 ஆம் ஆண்டின் போது கொம்ப்ட்ரோலர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட தகவல்களின் பிரகாரம் திணைக்களத்தின் 07 மாவட்ட அலுவலகங்களின் 18 கட்டிடங்கள் 05 ஆண்டுகளிலிருந்து 15 ஆண்டுகள் வரையான காலமாக அழிவடைந்துள்ளதனால் பயன்படுத்தப்படாது காணப்படுகின்றன. | 07 மாவட்டங்களின் 18 கட்டிடங்கள் சேதமடைந்துள்ளதனால் பயன்படுத்த முடியாத கட்டிடங்களை புனரமைத்தல் செலவு விடயத்தின் கீழ் போதியளவு நிதி ஏற்பாடு காணப்படாததன் காரணமாக அக்கட்டிடங்களை இன்றுவரை திருத்தம் செய்வதற்கு முடியாதுள்ளது. | பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளாத கட்டிடங்களை பயன்படுத்துவதற்கு, திருத்தம் செய்வதற்கு அல்லது ஏனைய அரசாங்க திணைக்களத்திற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | திணைக்களத்தின் வாகனங்கள் மற்றும் நாரஹேன்பிடவிலுள்ள இயந்திர பாகங்கள் உள்ள களஞ்சியம் 2020, 2021 மற்றும் மீளாய்வாண்டிற்காக மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் வாகன மீளாய்வு மற்றும் நாரஹேன்பிட இயந்திர பாகங்கள் உள்ள களஞ்சியத்தின் மீளாய்வு இந்த ஆண்டின் போது மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கிறேன். | வாகனங்கள் மற்றும் இயந்திர பாகங்கள் உள்ள களஞ்சியம் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். |

## 4. மனிதவளங்கள் முகாமைத்துவம்

### 4.1 இணைத்துக் கொள்ளப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர், மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் திணைக்களத்தின் அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை 19,790 ஆக இருந்ததுடன் 36 பதவிகளுக்கான மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 5,196 ஆகும். | அமைச்சு திணைக்களம் மற்றும் அதன் கீழுள்ள அனைத்து நிறுவனங்களிலும் ஆரம்ப சேவை தரத்திலுள்ள அனைத்து வெற்றிடங்களுக்குமான ஆட்சேர்ப்புக்களை மீண்டும் அறிவிக்கும் வரை நிறுத்திவைப்பதற்கு அமைச்சரவைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறே அமைச்சு திணைக்களம் மற்றும் அதன் கீழுள்ள அனைத்து நிறுவனங்களிலும் ஊழியர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக தொடக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தும் இதுவரை நியமனம் | அத்தியவசியமான பதவிகளுக்காக ஆட்சேரப்பு செய்யப்படுதல் வேண்டும். அவடவாறு இல்லையாயின் ஊழியர் எண்ணிக்கையை திருத்தம் செய்தல் வேண்டும். |

வழங்கப்படாத பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்களை பிற்போடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனால் பல்நோக்கு உதவியாளர் பதவியில் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு விவசாய அமைச்சின் அங்கீகாரம் வேண்டப்பட்டுள்ளது. அதற்கிணங்க 91 கமத்தொழில் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளை நிரப்புவதற்கான அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதற்கிணங்க தகமைபெற்றுள்ள போட்டியாளர்களின் தகமைகளைப் பரீட்சித்ததன் பின்னர் 34 உத்தியோகத்தர்கள் கமத்தொழில் அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் II இற்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். அவ்வாறே 18 தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்), 05 தொழில்நுட்ப உத்தியோகத்தர் (இயந்திரம்) மற்றும் 17 தொழில்நுட்ப உதவி உத்தியோகத்தர்களை சேர்ததுதக்கொள்வதற்கான அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதற்கிணங்க திறந்த எழுத்துமூல போட்டிப் பரீட்சையின் பெறுபேற்றிற்கு இணங்க தகமைகளைப் பரீடசிக்கும் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் 11 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் (சிவில்), 01 தொழில்நுட்ப உத்தியோகத்தர் (இயந்திரம்), மற்றும் 15 தொழில்நுட்ப உதவி உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கை தற்பொழுது இடம்பெற்று வருகின்றது.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2022 ஆம் ஆண்டின் போது 16 மாவட்ட அலுவலகங்களின் கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் பதவிகளில் 1,628 பதில் கடமை பார்த்தல் நியமனங்கள் காணப்பட்டதுடன் அவற்றில் 209 பதில் கடமை நியமனங்களுக்காக அமைச்சு அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | பதில் கடமை நியமங்களுக்காக அமைச்சு அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |